முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 133/2023

நாள். 16.02.2026 வா.சா.1 – திருமதி.யேசு அன்ன கவிதா

க/பெ - திரு.அந்தோணி மைக்கேல் ரமேஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து ஆதியில் உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி தான். உங்கள் தகப்பனார் பெயர் என்ன என்றால் மரிய சிலுவை ராஜ் ஆகும். உங்கள் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர் ஆவார்கள். அவர்கள் பெயர் சுரேஷ், மகேஷ், ரமேஷ் ஆவார்கள். உங்களை வடக்கன்குளத்தில் தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரி தான். உங்கள் கணவர் வெளி நாட்டில் இருக்கிறார் என்றால் சரி தான்.

2) உங்கள் தந்தை கிரையம் பெற்ற கிரைய ஆவணம் உங்களிடம் உள்ளது என்றால் சரி தான். அதை நீதிமன்றத்தில் நீங்ள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் கூறியது போல் உங்கள் தகப்பனாரின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் தான் அந்த ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உங்கள் தந்தைக்கு சர்வே எண். 730/2 ல் 13 செண்டு உள்ளது என்றால் 12 செண்டு உள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:04:40 +0530

3) நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பட்டாவில் 13 செண்டு என்று உள்ளது என்றால் இருக்கலாம். மேற்படி 12 செண்டில் நீங்கள் மொத்தம் 7 1/4 செண்டுக்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். மீதி சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.3 பட்டாவில் உங்கள் பெயர் ஆன யேசு அன்ன கவிதா மற்றும் உங்கள் தந்தையார் பெயர் மட்டும் தான் உள்ளது என்றால் சரி தான்.

4) 7 1/4 செண்டு சொத்து தவிர்த்து மீதி சொத்தானது உங்கள் அப்பாவின் பெயரில் உள்ளதா என்றால் என் பெயரில் உள்ளது, அதற்குண்டான ஆவணத்தை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளதாக சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1, மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களை தவிர உங்கள் தகப்பனார் உங்களுக்கு வேறு எந்த ஆவணங்களும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 3/4 செண்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதில் மேற்கு பக்கம் எல்லையாக உங்கள் அப்பாவின் கையிருப்பு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

5) அந்த இடத்தை தான் சாட்சி சீதனமாக எழுதிக் கொடுத்ததாக கூறுகிறார். வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் மூலம் சர்வே எண். 730/2 எ – ல் உங்கள் தகப்பனார் 4 1/2

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:04:46 +0530

செண்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். மேற்படி சர்வே எண். 730/2 நிலத்தில் வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை தவிர வேறு யாருக்கும் எனது அப்பா எவ்வித ஆவணங்களம் எழுதி வைக்கவில்லை என்றால் சரி தான். 7 1/2 செண்டு போக மீதி உள்ள நிலம் 5 1/2 செண்டு உங்கள் தந்தை பெயரில் தான் இன்று வரை உள்ளது என்றும் அதனால் தான் உங்களது தந்தை பெயரில் ஜாயிண்ட் பட்டா உள்ளது என்றால் சாட்சியானவர் அந்த சொத்தை எனது தகப்பனார் முன்பு விற்று விட்டார் என்று கூறுகிறார்.

6) 13 செண்டு நிலத்தில் நீங்கள் வீடு கட்டி குடியிருந்து வந்தீர்கள் என்றால் சரி தான். அந்த வீடானது தற்போது இடிக்கப்பட்டு விட்டது என்றால் பிரதிவாதி எனது அண்ணன் ரமேஷ் இடித்து விட்டார். வீட்டை இடித்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டது அந்த முதல் தகவல் அறிக்கை பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் புகார் கொடுத்தேன். 100 எண் மூலம் புகார் கொடுத்தேன்.

7) உங்கள் அண்ணன் கொடுத்த புகாரின் பேரில் காவல் நிலையத்தில் உங்கள் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு உங்களை விசாரித்தார்கள் என்றால் சரி தான். உங்கள் அப்பா காலத்தில் இருந்தே ஒரு பழைய காலத்து வீடு இருந்தது என்றால் சரியல்ல. ஓலை குடிசை போட்டு எனது அம்மா அங்கு இருந்தார். அந்த ஓலை

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.02.16 15:04:52 +0530

குடிசை வீட்டில் மின்சார இணைப்பு இருந்ததா என்றால் இருந்தது. உங்கள் அப்பா எப்போது இறந்தார் என்றால் ஜனவரி 31ம் தேதியாகும். இன்றைய தேதியில் இருந்து 2 வருடம் முன்பு இறந்தார். எனது அம்மா தற்போது உயிருடன் தான் உள்ளார்.

8) பிரதிவாதி உங்கள் அண்ணன், உங்கள் தந்தை மும்பையில் வேலை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது அண்ணன் மும்பையில் வேலை செய்தார். எனது அப்பா ஊரில் கடை வைத்திருந்தார். உங்கள் அண்ணன் மும்பையில் வேலை செய்து உங்கள் அப்பாவிற்கும், அம்மாவிற்கும் மணியார்டர் மூலம் பணம் அனுப்புவது வழக்கம் என்றால் சரியல்ல. உங்கள் சகோதரர் அனுப்பிய பணத்தில் தான் உங்கள் தகப்பனார் சொத்தில் வீடு கட்டி இருந்தார் என்றால் சரியல்ல, எனது அண்ணன் சிறு பிள்ளையாக இருக்கும் போதே எனது தகப்பனார் வீடு கட்டி விட்டார்.

9) 13 செண்டு சொத்தை பொறுத்து பிரதிவாதி ஒரு பாகப்பிரிவினை வழக்கு ஆன அ.வ.எண். 130/2023 சார்பு நீதிமன்றம், வள்ளியூரில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான். உங்கள் தகப்பனார் ஆண் பிள்ளைகளுக்கு தனியாக சொத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எல்லோருக்கும் பங்கு கொடுத்தார். 13 செண்டு இடம் தற்போது காலியாகத் தான் உள்ளது என்றால் சாட்சியானவர் 3 செண்டில் எனது வீடு உள்ளது, மீதி நிலம் காலியாக உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:04:59 +0530

முன்பு உங்களுக்கும் உங்கள் அண்ணனுக்கு பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரி தான். பேச்சு வார்த்தை கிடையாது.

10) பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் உங்கள் இருவருக்கும் பிரச்சனை வந்தது என்றால் சரி தான். நீங்கள் உங்கள் அப்பாவை ஏமாற்றி சொத்தை எழுதி வாங்கி உள்ளீர்கள் என்றால் சரியல்ல, எனது அப்பா உயிருடன் இருக்கும் போதே எழுதி தந்து விட்டார். இன்றைய தேதி வரை வழக்கு சொத்தும் மற்ற சொத்துக்களும் ஆக 13 செண்டு சொத்துக்களும் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் கூட்டு பங்காளிகளுக்கு எதிராக உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

11) முந்தைய தீர்வு ரசீதுகளான உங்கள் தகப்பனார், தாயார் பெயரில் உள்ள தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது பெயரில் உள்ள தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி பாகப்பிரிவினை வழக்கு முடியும் வரை எந்த வித கட்டுமானமும் கட்டக் கூடாது என்று தடுத்து வைத்துள்ளார் என்றால் சரி தான். சாட்சியானவர் தானாக முன் வந்து கட்டிடம் கட்டக் கூடாது என்று இடைஞ்சல் செய்ததாக கூறுகிறார். ஏற்கனவே இருந்த கட்டிடம் இடிக்கப்பட்ட பின்பு பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாக எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.02.16 15:05:05 +0530

12) நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து வாரிசு சொத்து என்றும் அதை பொறுத்து பாகப்பிரிவினை வழக்கு நடந்து வருவதால் உங்களுக்கு தனிப்பட்ட உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, அதனால் நீங்கள் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.16 15:05:11 +0530